செ.வெ.எண்: 45 நாள்: 18.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், புதுக்கோட்டை மாவட்ட பிரிவு சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகள் (2016-17) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.11.2016) நடைபெற்றது.

இந்த மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி 2016-17-ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 21 வயதுக்குட்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் இருபாலருக்கும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் இன்று (18.11.2016) முதல் 19.11.2016 வரை இரண்டு நாட்களுக்கு நடைபெறும். இதில் தடகளம், நீச்சல், கடற்கரை கையுந்து பந்து, குத்துச்சண்டை, பென்சிங், ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, ஜூடோ, டேக்வாண்டோ மற்றும் பளு தூக்குதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது.

இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒரு நபருக்கு முதல் பரிசு ரூ.1000ம், இரண்டாம் பரிசு ரூ.750ம், மூன்றாம் பரிசு ரூ.500 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். எனவே அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள் போட்டிகளில் பங்கேற்று சிறப்பாக விளையாடி வெற்றி பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சா.வாஞ்சிநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**